**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.24/2023**

நாள்.02.03.2026

**வா.சா.1. 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

பொது அதிகார பத்திரமானது எனக்கு எந்த சர்வே நம்பரை பொறுத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 93/9B ஐ பொறுத்து மட்டும் கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் இந்த பொது அதிகாரப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. எந்த தேதி, எந்த இடம், எந்த வழக்கறிஞரிடம் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் வி.அரசு, வழக்கறிஞரிடம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி வி.அரசு, அவர்களின் அலுவலகத்தில் வைத்து தான் எனது தந்தையரால் கையொப்பம் செய்யப்பட்டது. எனது தந்தைக்கு கிறுகிறுப்பு, மயக்கம், உடல்நிலை பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு ஆகியவற்றின் காரணமாக தான் எனது தகப்பனார் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் அளித்துள்ளதாக எனது தகப்பனார் தெரிவித்தார் என்றால் சரிதான். மற்றொரு வழக்கில் OS 24/2023 என்ற வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எனது தந்தை வந்துள்ளார் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தில் ரோட்டரி பப்ளிக் எந்த தேதியில் கையொப்பம் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதே போல் பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சத்திரத்திற்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாகவும், ஆக்கிரமிப்பை அகற்றவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு வழக்கு தொடர்பான விவரங்கள் எப்படி தெரியும்

என்றால் அப்பா, அம்மா இருவரிடமும் கேட்டு தெரிந்து கொண்டேன். செய்கையின் மூலமாகவும், ஆவணங்களிலிருந்தும் தெரிந்து கொண்டேன். செய்கையின் மூலமாக தெரிந்து கொள்வதற்கு ஏதேனும் படித்துள்ளேனா என்றால் இல்லை. 2, 3 வருடங்களாக எனது தந்தை செய்கையின் மூலம் எனக்கு தகவலை தெரிவித்தார். நான் சொல்வது போல் எனது தந்தைக்கு எவ்வித குறைபாடும் இல்லை. அப்படி இருந்தால் இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்திருக்க மாட்டார். இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியத்திற்கான தகவலானது எனது தகப்பனார் சொல்லியும், ஆவணங்களை படித்து பார்த்தும் தெரிந்து கொண்டேன். எனது சத்திரத்திற்கு சொந்தமாக மொத்தம் எவ்வளவு சொத்துகள் இருக்கும் என்றால் 32 ஏக்கர் இருக்கும். மேற்படி 32 ஏக்கர் சொத்தானது யார் யார் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் கணேசன், நடராஜன், துரைராஜன், கந்தன், இதேபோன்று 40 நபர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி 32 ஏக்கரின் 40க்கு மேற்பட்ட சர்வே எண் ஊர்ஜிதமாக உள்ளது. தாவா சொத்து சத்திரத்திற்கு எப்படி கிடைத்தது என்றால் ராமையா புரையர் என்பவர் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எங்களுக்கு சொந்தமானது. சத்திரம் என்பது யாருக்கு சொந்தமானது என்றால் எங்களது குடும்பத்திற்கு சொந்தமானது. எனது குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் என்றால் அப்பா – ராமதாஸ், அம்மா – ராஜேஸ்வரி, சகோதரர் – நடராஜன் – வினோதினி, குமார் – பிரியா மற்றும் சித்தார்த் ராம்

ஆகியோர்கள் ஆவார்கள். எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக சத்திரம் என்று சொல்லிவிட்டு என் தகப்பனார் ராமதாஸ் என்பவரை மட்டும் வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாலும், குடும்ப உறுப்பினர்கள் அதிகார முகவர் என்ற அடிப்படையிலும் வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. சத்திரத்திற்கு சொந்தமான சொத்துகளை பொறுத்தமட்டில் ஏதேனும் விற்பனை, குத்தகை செய்யப்பட்டதா என்றால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. விற்பனையும் செய்யப்பட்டுள்ளது. இந்த சத்திரம் எப்போது தொடங்கப்பட்டது என்றால் 1909 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சத்திரத்திற்கு சொந்தமான சொத்து யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் ராமையா புரையர் என்பவர் அவரது மகனாக பக்கிரிசாமி புரையருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. ராமையா புரையர் உள்ளவரை அவரும், அவருக்கு பிறகு பக்கிரிசாமி புரையரும் சத்திரத்திற்கு சொந்தமான சொத்துக்களை பராமரித்து வரவேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமையா புரையருக்கு எத்தனை மனைவி என்றால் ஒரு மனைவி. மேற்கண்ட விவரத்தை யார் எனக்கு சொன்னார்கள் என்றால் எனது தகப்பனார் சொன்னார். பின்னர் படித்து பார்த்தும் தெரிந்து கொண்டேன். ராமையா புரையருக்கு ஒரு மனைவி தான் என்பதை எதை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் 1934–ல் பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரத்தில் ராமையா புரையரின் மனைவி அம்மாள் அம்மை என தெரிந்து கொண்டேன். பக்கிரி சாமி புரையர், வைத்தியநாத புரையர், செல்லக்கண்ணு புரையர், தங்கவேல் புரையர், சரவணன், சுப்பிரமணியன்,

ஹரிக்கிருஷ்ணன் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் செல்லக்கண்ணு புரையர், தங்கவேல் புரையர், சரவணன், சுப்பிரமணியன் மற்றும் ஹரிக்கிருஷ்ணன் ஆகியோர்களை மட்டும் தெரியும். ராமையா புரையரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேலே சொல்லப்பட்ட நபர்கள் அனைவரும் ராமையா புரையரின் வாரிசுகள் என்றும், அதை மறைப்பதற்காக இந்த வழக்கில் ராமையா புரையரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சத்திரத்திற்கு சொந்தமான சொத்துக்களை நிர்வாகம் செய்து வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. டிரஸ்டிற்கு சொந்தமாக சொத்தினை பொறுத்தமட்டில் என்ன பணிகளை செய்ய வேண்டும் என்று சொன்னால் கோவிலுக்கு, தர்ம காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டும். மேற்படி கோவிலுக்கும், தர்ம காரியங்களுக்கும் டிரஸ்டிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு செய்வதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த டிரஸ்டிலிருந்து எவ்வளவு வருமானம் வருகின்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. டிரஸ்டில் எத்தனை உறுப்பினர்கள் என்றால் உறுப்பினர் யாரும் கிடையாது. தர்மகர்த்தா மட்டும் உள்ளார். எங்கள் சத்திரத்திற்கு சட்ட ஆலோசகர், நிதி ஆலோசகர் உள்ளார்களா என்றால் இனிமேல் தான் நியமிக்க வேண்டும். இதுவரை இல்லை என்றால் சரிதான். தணிக்கையாளரை கொண்டு வருடா வருடம் வரவு, செலவு கணக்குகளை பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாடகை வசூல், குத்தகை பராமரிப்பு

போன்றவற்றிற்கு வரவு, செலவு கணக்குகள் பராமரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என் தந்தையின் அனுமதியின் பேரில் தான் வாடகைக்கு குடியிருந்து வர ஒரு வருடத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்டது. எந்த வருடத்திலிருந்து பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என இந்த வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் 1987லிருந்து குடியிருந்து வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் கட்டண ரசீது, வீட்டு வரி ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. யார் பெயரில் மேற்கண்ட ரசீதுகள் இருந்து வருகிறது என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதியின் அனுமதியின் பேரில் தான்பிரதிவாதிகள் குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால் இல்லை. வழக்குரையில் அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சிங்காரவேலு எந்த வருடத்திலிருந்து குடியிருந்து வருகிறார் என எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தேதி, மாதம் சொல்லவில்லை. வருடம் 1989–ல். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுவாதீனம் எந்தெந்த வருடம் ஒப்படைக்க வேண்டும் என எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் 2 ஆண்டுகள் கழித்து இடத்தை ஒப்படைக்க வேண்டுமென சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் வழக்குரையில் சொல்லவில்லை என்றும், இந்த

வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆக்கிரமிப்புகள் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டில் வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது எந்த ஆண்டிலிருந்து கட்டப்பட்டது, யார்யார் பெயரில் கட்டப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு பிரதிவாதிகள் பெயரில் மின் இணைப்பு இருந்ததும் என்றும், மின்கட்ணம், மற்றும் வீட்டு வரி ரசீதுகள் செலுத்தியுள்ளார்கள் என்றும், நான் இந்த வழக்கிற்காக இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மின்கட்டண மின்இணைப்பு மற்றும் வீட்டு வரியை வாதி பெயரில் மாற்ற ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. செல்லப்புடையர் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சத்திரம் என்பதற்கு தனிப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து சத்திரமாக இயங்கி கொண்டிருக்கிறது என்பதற்கு நடைமுறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தந்தை கூட்டுறவு

வங்கியில் கடன் வாங்கப்பட்ட விவரம் ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து வீடு மற்றும் மனை பகுதி. உரிய மதிப்புடன் வழக்குரை தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுப்படி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்திரனம் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.93/09–ல் எந்த பக்கத்தில் தாவா சொத்து உள்ளது என குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லையும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவர காலத்தில் எந்த மாவட்டம், எந்த தாலுக்கா, எந்த ஊரில் சொத்து அமைந்துள்ளது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1981–ம் ஆண்டு புத்தகம் 1 ஆவண எண்.1827 என உள்ளது என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.1–ல் 1909–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் தேதி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். முற்றிலும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதனால் தான் 72 ஆண்டுகளுக்கு பின்னிட்டு பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 –ல் 6வது வரியில் தர்மசத்திரம் ஒன்று கட்டப்பட்டு 12 ஏக்கர் 65 செண்ட் ஏற்கனவே விடப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த 12 ஏக்கர் 65 செண்ட்

சொத்திற்குண்டான எந்த புலஎண், எந்த ஊரில் உள்ளது என்ற விவரங்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் எந்த செட்யூலில் உள்ள சொத்து என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 12 வது வரியில் நான் அனுபவத்தித்து வருகின்ற நிலங்களில் ஏக்கர் 4 செண்ட் 97 என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 4 ஏக்கர் 97 செண்ட் சொத்திற்குண்டான எந்த புலஎண், எந்த ஊரில் உள்ளது என்ற விவரங்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அடியில் கண்ட 34 ஏக்கர், 47 செண்ட் செல்லபுடையார் வாங்கிய கடனுக்காக மற்றவரிடம் கிரயம் செய்து கொடுத்தில் சர்வே எண் ஏதும் கிடையாது என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் உள்ளவரையில் நானும், எனக்கு இப்போது இருக்கின்ற என் மகன் 2 வயதுள்ள மைனர் பக்கிரிசாமியும், அவருக்கு பிறகு மேற்படி யான் சங்கதிகளும் வம்ச பரம்பராயாக மேற்படி தர்மத்தை பரிபாலித்து வரவேண்டியது என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3–ம் பக்கத்தில் 11வது வரியில் சில வழியுறுத்தல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் 1 –தகப்பனார் நாள் முதல் நடந்து வருகின்ற வழக்கப்படி மேற்படி சத்திரத்திற்கு ஒரு பிராமணனை வைத்து மேற்படி சத்திரத்தில் இருக்கிற மடத்திற்கு இரண்டு காலமும் பூஜை,

நெய்வேத்தியம் நடத்தி வறவேண்டியது என்று உள்ளது. அதுபோல் தற்போது நடைபெற்று வருகிறதா என்றால் நடைபெற்று வருகிறது. மடத்தில் என்ன கடவுள் உள்ளார், மடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது, அந்த மடம் இருக்கின்ற சர்வே எண்ணின் நான்கெல்லை, கிருஷ்ணர் படம் உள்ளது. புல எண்.192. குளத்திற்கு வடக்கு, ரோட்டிற்கு தெற்கு, ரோட்டிற்கு மேற்கு, கிழக்கு. மடம் இருப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மடம் இருப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. இந்த மடத்திற்கு பூஜை செய்யும் பிராமணன் யார் என்றால் ஆரியலூரில் வெங்கடேச குருக்கள். இந்த மடத்திற்கு பூஜை செய்த வெங்கடேச குருக்களை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளோம். வெங்கடேச குருக்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம் என்றால் பூஜையின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கிறோம். இந்த சம்பளம் கொடுத்த விவரத்தினை தங்கள் சத்திர கணக்கு வழக்கில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சத்திரம் எங்கு உள்ளது என்றால் கடுவெளி கிராமத்தில் உள்ளது. அந்த சத்திரத்திற்கு விளக்கு யார் போடுகிறார் என்றால் குடும்பத்தில் உள்ளவர்கள் போடுவார்கள். மடத்தை பராமரிபதாகவும், பூஜை செய்வதாகவும் எந்த விவரமும் வழக்குரையில் இல்லை என்றால் சரிதான். தினந்தோறும்

அன்னதானம் செய்கிறதா என்றால் செய்கிறோம். எங்கு வைத்து போடுகிறோம் என்றால் மடத்தில் வைத்து போடுகிறோம். மடம் இடிந்ததால் கொட்டகை அமைத்து அன்னதானம் போடுகிறோம். தினமும்அன்னதானத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு என்றால் 1 மாதத்திற்கு ஆகும் செலவு 2 ஆயிரம் ஆகும். இந்த 2 ஆயிரத்திற்கு வருமானம் ஏது என்றால் மடத்திற்கு சொந்தமான சொத்திலிருந்து வரும் வருமானத்தை கொண்டு அன்னதானம் செய்து வருகிறோம். குளத்திற்கு படிதுறை கட்டியுள்ளோம். அந்த குளத்திற்கு என்ன பெயர் என்றால் சத்திரம் குளம். அதேபோல் தண்ணீர் பந்தல் வைத்து நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். மேற்கண்ட விவரங்களை குறித்து கண்டறிய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து பார்வையிட ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள படி மடம் இல்லையென்றும், அதில் உள்ள சரத்துக்களை கடைப்பிடிக்கவில்லை இந்த சத்திரத்திற்கு தாங்கள் மட்டும் வாரிசுகள் கிடையாது என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பக்கிரிசாமி புரையருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தந்தையின் தந்தை பெயர் செல்லகண்ணு. உயில் ஆவணத்தில் கடைசி 3 வரிகளில் ஏ செடியூல் கண்ட சொத்துகள் எனக்கு பிறகு சர்வ சுதந்திரத்துடன் மேலே கண்ட 2

பவுத்திரர்களும் அடைந்து கொள்ளவேண்டும் என உள்ளது என்றால் சரிதான். நெட்டிகுளம் என்பது வேறு , சத்திரகுளம் என்பது வேறு. நெட்டிகுளத்திற்கு மேல்கரையில் விக்னேஷ்வரர் கோவிலுக்கு உள்ள பூஜை அனைத்தும் நாங்கள் தான் பார்க்கிறோம் என்றால் சரிதான். விக்னேஷ்வரர் கோவிலுக்கு பூஜை நெய்வேத்தியம் முதலியவை யார் செய்வார்கள் என்றால் நானும், அப்பாவும் செய்கிறோம். பூஜைகள் செய்வதற்கு அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் படித்துள்ளோமா என்றால் இல்லை. ஆரியலூர் கிராமத்தில் உள்ள ராமநாத சுவாமி கோவிலை நான் தான் படைத்து வருகிறேனா என்றால் இல்லை. என்னுடைய செலவில் ஐயர் வெங்கடேச குருக்கள் செய்து வருகிறார்கள். அதேபோல் நடராஜர் சுவாமிக்கு, திருவண்ணாமலை சாமிக்கு தொகைகள் செலுத்தி வருகிறோம் என்றால் சரிதான். மணிஆடர் முறையில் மேற்படி சன்னதிகளுக்கு பணம் செலுத்தியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்கீறீர்களா , நேரடியாக பணம் செலுத்திய ரசீது தாக்கல் செய்கிறேன். சத்திரம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து நாளது தேதி வரை பூஜை, வழிபாடு, அர்ச்சனை செய்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். நான் சத்திரத்திற்கு சொந்தமான மடம் கோவில்களுக்கு எந்த பூஜை பராமரிப்பு அன்னதானம் இன்ன பிற வா.சா.ஆ.1, 2 செட்டில்மெண்ட்

உயிலில் உள்ள சரத்துக்களை பின்பற்றாததால் அதற்கு உரிய ஆவணங்கள் ஏதும் வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தங்களுக்கே உண்டான காரணங்கள் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோலா வா.சா.ஆ.1 , 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் சர்வே எண், நான்கெல்லை , விஸ்திரனம் குறிப்பிடாமல் உள்ளது என்றால் சரிதான். அதேபோல உயிலின் உள்ள சொத்துக்கள் விடப்பட்டிருந்தால் என் பவுத்திரர் இருவருக்கும் ஆண்டு அனுபவித்து கொள்வது என்றால் சரிதான். அதேபோல் சொத்து விவரத்தில் எந்த மாவட்டம், எந்த தாலுக்கா, எந்த கிராமத்தில் சொத்து அமைந்துள்ளது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். அதேபோல் தாவா சொத்தின் முந்தைய புல எண்.93/9பி என்றால் சரிதான். முந்தைய புல எண். 93/9 என்றால் சரிதான். அதன் நான்கெல்லைவாய்க்காலுக்கு தெற்கு, குளத்திற்கு வடக்கு, வெங்கடாசல புரையருக்கு மேற்கு, காசிநாத புரையருக்கு கிழக்கு. மேற்கண்ட விவரங்கள் எல்லாம் எனக்கு சொல்லி தான் தெரியும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் சென்னையில் தனியார் தொலைகாட்சி பத்திரிக்கை நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அதேபோல் 1989–ல் இந்த சொத்து தொடர்பாக வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே நடந்த

பேச்சு வார்த்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தினை பன்நெடுங்காலமாக அவருடைய அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதால், பிரதிவாதிக்கு உரிமை ஏற்பட்டுள்ளது என்றும், வழக்கு மூலம் சரியானது இல்லை என்றும், சொத்து விவரம் சரியானது அல்ல என்றும், வாதியால் தாக்கல் செய்யப்பட்ட 1, 2 ஆவணங்களின் சரத்துக்களை பின்பற்றாததாலும், சொத்து மதிப்பு தவறாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், காலவரையரை உட்பட்டு வழக்கு தாக்கல் செய்யாததாலும், நஷ்டஈடு தொடர்பாக வழக்குரையில் உரிய விளக்கம் அளிக்காததாலும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தேதி, அதன் தொடர் நிகழ்வுகளில் தேதி குறிப்பிடாததாலும், உரிய வாரிசுகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யாததாலும் வாதி கோரும் பரிகாரம் கிடைக்கககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இராமயா புரையர் வாரிசுகள் பிரதிவாதியின் மூதாதையர்கள் என்பதை மறுத்து வாதி மட்டுமே வாரிசு என்று வழக்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்றாகும். செல்லபுரையாரின் உண்மையான முழு வாரிசுகளையும், வழக்கில் சேர்க்காமல் மோசடியாக தான் வாரிசு என்று உரிய ஆவணங்கள் இன்றி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டி வேண்டுகிறேன்.

**மறுவிசாரணை:- இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.